# பரலோக பொக்கிஷங்கள்

மேலானவைகளையே நாடுங்கள்! (கொலோசெயர் 3:2)



## ‘துன்பத்திலும் மாறாத’ பசுமை ஜீவியம் உண்டு!

கொல்கொதா மேட்டின் உச்ச கட்ட சூழ்நிலையில் “உமக்காக அழுகிறோம்!” என இயேசுவின் அருகில் வந்து கூறியவர்களிடம் “என்னை அன்புகூரும் எருசலேம் குமாரத்திகளே.....” என அழைத்து, தன் ‘பசுமை குன்றா மகிழ்ச்சி முகத்தை’ அவர்களுக்கு காட்டினார்! “ஆ, இது ஆச்சரியம், அவர் பச்சைமரம்! ......சோர்ந்து அழுத நாங்களே பட்டமரம்!”என்ற மேலான வெளிச்சத்தைப் பெற்றார்கள் அந்த எருசலேம் நங்கைகள்! (லூக்கா 23:31). ‘இருதயம் சோர்ந்து போகாத’ இந்த அற்புத ஜீவியத்தை தேவன் இன்றும், சிலுவை பாதையில் முன் சென்றிடும் நமக்கும் தந்து கிருபை செய்வார்! ஆமென்.

-*tr*



## 'அவரது மந்தையைப் பாதுகாக்கும்' மேய்ப்பர்கள் வேண்டும்!

"வேறு யாரையாகிலும் அனுப்பும்!" என்றே தயங்கினான் மோசே! "நான் திக்குவாயன், மந்த நாவு கொண்டவன்" என மருகிப் பின்வாங்கினான்! சர்வவல்ல தேவனோ, கோபம் கொண்டார்... "நன்றாய் பேசுகிறவர்களை நான் அறிவேன்.... ஆகிலும், எனக்கு நீதான் வேண்டும்!" என்றே கட்டளையிட்டு, அந்த வனாந்திரத்தில் அழைத்தார்!! (யாத்.4:1-14).

"தேவனுக்கு மனிதர்கள் வேண்டும்!"என்பதா தேவனின் பாரம்? இல்லை! "தேவமனிதர்கள் வேண்டும்!" என்பதே அவரது பேராவல்! பிரசங்கிப்போர் ஏராளம்! வேதகலா வித்தகர்களும் ஏராளம்! பூமியெங்கும் உலாவும் அவரது கண்களில் 'ஒருவனை' அவர் தேடுகிறார். எங்கே அந்த தேவமனிதன்? இன்றைய கிறிஸ்தவ உலகில், கனவீன பாத்திரங்கள் ஏராளம்.... அது அல்ல அவர் தேடும் மனிதன்! அவன் 'கனத்திற்குரியப் பாத்திரமாய்!' எவ்வித தனது நற்செயலுக்கும் எஜமானே எடுத்து பயன்படுத்தும், கனத்திற்குரிய பாத்திரம்! அன்றும், இன்றும், கனத்திற்குரிய பாத்திரமே அவரது தேவை!

தனது ராஜரீக ஊழியத்திற்கு 'அழைப்பு கொண்டவனையே' தேவன் கோதுமை மணியாய் தெரிந்தெடுத்து.... அவனை 'உடைத்து' நொறுக்கி ஆயத்தப்படுத்துகிறார்! சர்வ வல்ல தேவனால் அழைக்கப்பட்டு, அவரது ஊழியனாய் இருப்பது சொல்லொண்ணா பாக்கியம். ஆகிலும், தேவ மனிதனுக்குரிய விலைக்கிரயம் செலுத்த துணிவு நெஞ்சம் கொண்டவர்கள் இல்லாதபடியால் "தேவனால் அழைக்கப்படுகிறவர்களும்" சொற்பமாகிப் போனார்கள்!

*-Ed*

**2025 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170/-** தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு செப்டம்பர் 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A-Zaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall mcf

## அன்றன்றுள்ள பாடுகளுக்கு கிருபை தரும் ஆண்டவர்!

*நாளைக்கோ 'அன்றுள்ள' கிருபை தருவார்*

நம் ஜீவகாலமெல்லாம் கடைப்பிடிக்க வேண்டிய மிக முக்கியமான ஓர் வசனத்தை இயேசு கூறினார்: "நாளைக்காக கவலைப்படாதிருங்கள், நாளையதினம் தன்னுடையவைகளுக்காக கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்" என கூறினார் (மத்.6:34). இயேசு தெளிவாய் கூறியதெல்லாம் "நீங்கள் எதிர்காலத்திற்காக கவலைப்பட வேண்டாம்" என்ற சத்தியமேயாகும்!

*வரப்போகும் எதிர்காலத்திற்குரிய பிரச்சனைகள் இருந்தாலும் 'அந்த நாளிலே' அந்த பிரச்சனைகள் தீர்வு அடைவதற்கு 'ஓர் வழி' கிரியை நடப்பிக்கத்தான் செய்யும்! அன்று அந்த பிரச்சனைகளை சந்திக்கும்போது, அதைக்குறித்த கிரியைகளை நீங்கள் செய்யலாம்! ஆனால், அந்த பிரச்சனைகளை முன்கூட்டியே தீர்த்து வைப்பதற்கு யாதொரு வழியும் இல்லை!*

நாளையைக் குறித்த ஆயத்தம் செய்வது நல்லதுதான்! ஆனால் **நாளையைக் குறித்து கவலைப்படுவது 'பாவம்'** என்பதை அறியுங்கள். ஏனென்றால் தேவன் 'இன்றைக்கு' தேவனாகவே கிரியை செய்பவர், நாளைக்கும் தேவனாகவே கிரியை செய்வார். புலம்பல் 3:23-ம் வசனம் கூறுகிறப்படி "அவருடைய இரக்கங்கள் **காலைதோறும்** புதியவைகள்". அன்று இஸ்ரவேல் ஜனங்களை தேவன் போஷித்ததைப்போலவே, போதுமான 'அன்று வேண்டிய மன்னாவினால்' போஷித்துக் கொண்டுதான் இருக்கிறார்.

'கவலை' தன்னுடைய வலையில் சிக்கியவர்களை முற்றிலும் செயல் அற்றவர்களாய் மாற்றிவிடும்! அது உங்கள் மனதை நாளையைக் குறித்த நிகழ்வுக்கு உங்களை கொண்டு சென்று 'அதைக்குறித்து' நீங்கள் ஏதாவது கவலை அடையும்படி செய்துவிடும்.

> **" உங்கள் மனதை 'நாளைக்கு' நடத்த துடிக்கும் கவலை தரும் பயணத்தில், பயணம் செய்வதற்கு மறுத்துவிடுங்கள்.**

கர்த்தர் நமக்குச் சொல்வது என்னவென்றால்: "இன்று நீங்கள் கையாள வேண்டிய போதுமான காரியங்கள் இருக்கிறது! ஆகவே, இன்று உங்களுக்கு அருளப்பட்ட ஏதுகரங்களை 'இன்றைய தேவைக்கு' பயன்படுத்திக்கொள்ளுங்கள். அப்படி நீங்கள் செய்யவில்லையென்றால் "இன்று நீங்கள் பெறவேண்டிய சந்தோஷத்தை" இழந்து விடுவீர்கள்!

தேவனுடைய பிள்ளைகளாய் வாழ்பவர்களுக்கு 'சந்தோஷத்தை இழப்பதை' பாவமாகவே கருதுவார்கள்! ஏனெனில் நாளையைக் குறித்த கவலை கொண்ட ஏராளமான விசுவாசிகள் 'இன்று தேவன் அவர்களுக்குத் தரவேண்டிய ஜெயத்தை' இழந்துவிட்டார்கள்! அவ்வாறு சம்பவித்தால், அது தேவனுக்கு ஏற்பட்ட இழப்பேயாகும். "இது கர்த்தர் உண்டு பண்ணின நாள், இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்" என்றல்லவா வேதம் கூறுகிறது (சங்.118:24). ஆம், ஓர் மகிமையான ஜீவிய வரத்தை **இன்று** தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கிறார்.

*இந்த நாளுக்குரிய வெளிச்சத்தில் நீங்கள் நடந்து ஓர் முழுமையான சந்தோஷத்திற்குள் பிரவேசித்து விடுங்கள். இவ்வித சந்தோஷத்திற்குத் தேவையான 'தேவன் தந்த சகலத்தையும்' பயன்படுத்திக்கொள்ளுங்கள். இவ்வாறு வாழ்வதற்கு பதிலாய், அந்த 'நாளை' உங்களுக்கு வருவதற்கு முன்பாக நீங்களாகவே நாளைக்குள் பிரவேசித்து, "**இந்த நாளுக்குரிய சந்தோஷத்தை**" மதியீனமாய் இழந்துவிடாதிருங்கள்! பல சமயங்களில், நீங்கள் எதிர்பார்த்த 'நாளை கூட' உங்களுக்கு கிடைக்காமல் போகும். இன்று உங்களுக்கு கிடைத்திருப்பதுதான் மெய்யானவை! எப்படியெனில், நாளைக்கு நீங்கள் ஜீவித்திட தேவன் ஒருவருக்கும் அனுமதி தந்ததில்லை! 'அந்த நாளை' இன்று என மாறும்போது மாத்திரமே நீங்கள் கிரியை நடப்பிக்க முடியும்.*

J.ஆதாம்ஸ் என்ற பக்தன், கவலையில் உழன்று வாழும் கிறிஸ்தவர்களுக்காகவே அருமையான செய்திகள் பல எழுதி உள்ளார். அவர் கூறிய சில வரிகளை வாசித்துப் பாருங்கள்:

**நாளை என்றுமே தேவனுடையதுதான்**

**அதை நீங்கள் கையாள முயற்சிக்கும்போது**

**தேவனுக்குரியதை 'திருடிக்கொள்ள' முயற்சிக்கிறீர்கள்**

**உலகத்திலுள்ள பாவிகள் தங்களுடையதல்லாததை விரும்புவார்கள்!**

**அதை கைப்பற்ற நாடி, தங்களையே அழித்துக்கொள்ளுகிறார்கள்.**

**அன்பான விசுவாசியே, 'இன்று மாத்திரமே' தேவன் நமக்குத் தந்துள்ளார்.**

**'என்ன நடக்குமோ என்ற அச்சத்தை'**

**கண்டிப்பாய் அகற்றிவிட விரும்புகிறார்!**

**கவலை 'அகற்ற வேண்டியவைகளை' விரும்புவது மாத்திரமல்லாமல்**

**இன்று நமக்கு அருளப்பட்டவைகளை ''பயன்படுத்த தவறும்''**

**கொடிய நஷ்டத்திற்குள்ளும் தள்ளிவிடுகிறது!**

ஆகவே, தேவன் தன்னுடைய பெலனை ஒரு நாளுக்குரியதாய் தருகிறார் என்பதை நாம் உணர்ந்திருக்க வேண்டும். அதுவும், உங்களுக்கு இன்னது தேவையென்றும்? எப்பொழுது தேவையென்றும்? அறிந்து கொடுக்கிறார்! தேவன் எப்போதுமே **உங்களுக்குத் தேவையானதை மிஞ்சி வீணாய் தம்முடைய கிருபையை தந்தருளமாட்டார்.**

*ஒரு நடைமுறை நிகழ்ச்சியை கவனியுங்கள்: ஒருவேளை உங்களுக்கு மிகவும் பிரியமான ஒருவருடைய மரணம் சம்பவித்தால், அதை எப்படி கையாள போகிறீர்கள்? என்பதை கற்பனை செய்து பாருங்கள். இதுபோன்ற நிலையில், ஒரு சபையின் பாஸ்டராய் இருந்து நான் கவனித்ததை கூற விரும்புகிறேன். ஏனெனில், அநேக கிறிஸ்தவர்கள் இதுபோன்ற சூழ்நிலையை சந்தித்த நிகழ்ச்சிகள் பல நான் பார்த்திருக்கிறேன். முதலாவதாக இவ்வித சூழ்நிலை எனக்கு ஏற்பட்டபோது, நான் பெற்ற விசுவாச அனுபவத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்: ''எனக்கு பிரியமானவர்களின் மரணம் நிகழ்ந்த இந்த துக்கமான சமயத்தில் தேவன் என்னைத் தாங்கி கொண்ட அனுபவம் மிகுந்த ஆச்சரியமாயிருக்கிறது!'' எனக்கு பிரியமான ஒருவரை நான் இழந்துவிட்டது உண்மைதான். ஆனால், வார்த்தையால் விவரிக்க முடியாத பெலனும், நம்பிக்கையும், மகிழ்ச்சியும் என் உள்ளத்தை நிறைத்ததற்கு ஒரே காரணம் ''எனக்குப் பிரியமான நபர் (கணவனோ அல்லது மனைவியோ, தாயோ அல்லது தந்தையோ, மகனோ அல்லது மகளோ) உயிரோடுதான் இருக்கிறார், அதுவும் கர்த்தரோடு இருக்கிறார்!'' என்ற ஆச்சரியமான எனது அனுபவமேயாகும்.*

> "
> **நன்றாய் விளங்கி கொள்ளுங்கள், தேவையான நேரத்திற்கு ஏற்ப அவர் தமது கிருபையைத் தருகிறார்!**

இதற்கு மாறாக, எனக்குப் பிரியமானவரின் மரணத்திற்குப் பின் என்ன? என்ற எதிர்காலத்தைக் குறித்து நான் கவலைப்பட தொடங்கி விட்டால், என்னுடைய 'மன அழுத்தம்' இரட்டிப்பாய் பெருகிவிடும். ஏனென்றால், மன அழுத்தத்தைப் போக்க வல்ல கிருபையை நான் விசுவாசிக்கவில்லை என்பதுதான்!

கவனியுங்கள் ''இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும்

*மாறாதவராயிருக்கிறார்" என்ற வேத வசனம் நமக்குப் போதுமான தல்லவோ! (எபி.13:8). இந்த வசனம் தொனிக்கும் 'விசுவாச சத்தம்' உங்கள் உள்ளத்தை தொட்டுள்ளதா? ஆம், நேற்று உங்களுக்கு தேவன் என்ன செய்தாரோ 'அதையே' நாளையும் உங்களுக்கு கண்டிப்பாய் செய்திடுவார். ஆகவே, எதிர்காலத்தைக் குறித்து உங்களிடத்தில் ஏதாவது கேள்வி இருந்தால், நேற்றைய தினத்தை அல்லது கடந்த காலத்தை தயவுசெய்து திரும்பிப் பாருங்கள்! நேற்று அவர் உங்களை ஆதரித்து காப்பாற்றினாரா? அப்படியானால், நாளையும் "என்றும்" மாறாதவராயிருந்து உங்களை ஆதரித்து காப்பார்!*

*- ஜான் மேக் ஆர்தர்*

---

## ஜெபித்தும் 'விசுவாசிக்காதவர்கள்' பெற்றுக்கொள்வதில்லை!

*நிறைவான விசுவாசமே, பூரண மகிழ்ச்சி*

**நா**ன் பல வருடங்களாய் செய்த ஊழியத்தில், ஜனங்களிடம் கண்டது யாதெனில், "**ஏதோ கொஞ்சம், முடிந்த அளவு....**" என்ற பதம் அவர்களைப் பிடித்து ஆட்கொண்டிருக்கிறது. அதை இயேசு குறிப்பிடும்போது "அற்ப (கொஞ்சமாய்) விசுவாசிகளே" என எச்சரித்து கூறினார் (மத்தேயு 6:30). இன்று அனேகர் விசுவாசிக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், அதையெல்லாம் ஏதோ ஒரு பேச்சுக்கு சொல்வது போலிருக்கிறது. இவர்கள் நம்புவதெல்லாம் "ஏதோ கொஞ்சம்" காரியம் சீர்ப்பட்டு.... கொஞ்சம் கொஞ்சமாய்.... பலவருடங்கள் கழித்து..... மெல்ல, மெல்ல, சரியாகும் என்றே நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்! ஆனால், ஒன்றும் அவர்களுக்கு கை கூடுவது இல்லை. ஏனென்றால் தேவனுடைய வார்த்தை அப்படி இல்லை என்பதால்தான்! இதுபோன்ற "**கொஞ்சமான விசுவாசத்தை**" வேதவாக்கியம் நமக்குத் தருவதில்லையே! ஆனால், இன்றைய கிறிஸ்தவர்களோ கனவு உலகத்தில் வாழ்ந்து கொண்டு 'கொஞ்சத்தை நம்பி' தங்களையே ஏமாற்றி கொள்கிறார்கள்.

> " **அன்பிற்காக ஜெபிப்பார்கள்..... வல்லமைக்காக ஜெபிப்பார்கள்.... பொறுமைக்காக ஜெபிப்பார்கள்.... இவ்வாறு பரிசுத்தத்திற்கான யாவற்றிற்கும் ஜெபித்துவிட்டு.... முடிவில், விசுவாசிக்கமாட்டார்கள்! ஆகவே அவர்கள் ஒன்றையும் பெற்றுக்கொள்ளவும் மாட்டார்கள்!!**

உதாரணமாய், நாம் யாவருமே அன்பினால் நிரப்பப்பட விரும்புகிறோம்! ஆகவேதான் நீங்கள் அதற்காக ஜெபிக்கவும் செய்கிறீர்கள்..... ஆனால், நீங்கள் விசுவாசிப்பதில்லை, அவ்வளவுதான்!

*இந்த நிலையில், நீங்கள் எவ்வாறு அன்பினால் நிரப்பப்பட முடியும்? கூட்டங்களுக்கு நீங்கள் வாரந்தோறும், மாதந்தோறும், வருடாந்திர - கான்பரன்ஸ் கூட்டங்களுக்கும் சென்று கொண்டிருந்தாலும், நீங்களோ முன்பு எப்படி அன்பற்ற நிலையில் இருந்தீர்களோ அப்படியேதான் இன்னமும் இருக்கிறீர்கள்! இந்த கதிதான், இன்று அநேகருக்கு சம்பவிக்கிறது!*

*சொல்லிமுடியாத மகிழ்ச்சியில் வாழ்பவன் அதிலிருந்து வீழ்ச்சியடைகிறான் என்று யோசித்து பார்ப்பதுகூட ஓர் பைத்தியமான எண்ணம்போல் நமக்குத் தோன்றுகிறது. இவ்வுலகில் ஒருவனும், மகிழ்ச்சியென்னும் உன்னத ஸ்தானத்திலிருந்து கீழே இறங்கி வீழ்ச்சியடையவேமாட்டான்! அப்படியானால், பல வருடங்கள் கழித்து பெரும்பாலான கிறிஸ்தவர்கள் வீழ்ச்சியடைகிறார்களே, அது ஏன்? ஏனென்றால்..... இவர்கள் தேவனுடைய வார்த்தையை மனப்பூர்வமாய், முழுதும் விசுவாசிக்கவில்லை. ஆகவே, இவர்கள் ஜெபிக்கிறார்கள் ...... பலவருடங்கள் ஜெபிக்கிறார்கள்...... ஆனால், இவர்கள் முழுதும் விசுவாசிக்காதபடியால் ஒன்றும் பெற்றுக் கொள்வதுமில்லை!*

*__ந__ம் வாழ்விற்குத் தேவையான எல்லாமே வேதப்புத்தகத்தில் இருக்கிறது! மனந்திரும்பாதவர்களுக்கும், புதிதாய் மனந்திரும்பிய வர்களுக்கும், வளர்ச்சியடைந்த விசுவாசிகளுக்கும்.... இவ்வாறு எல்லோருக்கும் தேவையான வேதவாக்கியங்கள் நீங்கள் வைத்திருக்கும் வேதப்புத்தகத்தில் இருக்கிறது. அவையனைத்தும் உண்மை! ஆனால், துயரம் யாதெனில், நம்முடைய இருதயத்திற்குள் உட்கார்ந்திருக்கும் "__அற்ப (கொஞ்சமான) விசுவாசமே__" நம் வாழ்வின் சூழ்நிலையைத் தாறுமாறாக்கி விடுகிறது. இதைப் பல வருடங்களாய் நீங்கள் கவனிக்காமல் விட்டுவிட்டீர்கள்! இன்று வாழும் உங்கள் பரிதாப ஜீவியத்திற்கு காரணம், நீங்கள் பெற்றுக்கொண்ட வேதவசனம் அற்ப விசுவாசத்தின் வழியாகச் சென்று..... அதன் விளைவாய், நீங்கள் பெற்ற பெலஹீனமான சத்தியங்களே, உங்களின் இந்த துயர நிலைக்கு காரணமாகும்!*

**"பிலிப்பியர் 1:9-ல் "உங்கள் அன்பானது, அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய் பெருகுவதாக" என வாசிக்கிறோம். இந்த வசனத்தில் கண்ட "அதிகம்" என்ற வார்த்தையை எப்படி எடுத்துக் கொண்டீர்கள்? பல வருடங்கள் கழித்து, இன்றும்கூட "ஏதோ கொஞ்சம்" பெற்றுக்கொள்வோம்! என்றுதானே எண்ணிக்கொண்டீர்கள்?**

இங்குதான் அற்ப விசுவாசம் உங்களுக்குள் எதிர்மறையான வேலைசெய்து விட்டது! உங்களில் அநேகர், எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை எழுதப்பட்டவிதமாக காண்பதே இல்லை! ஆகவே, எழுதப்பட்ட **வேதவாக்கியங்களின்படியான 'அதே விசுவாசம்'** உங்களிடத்தில் இருப்பதில்லை. இது எப்படியிருக்கிறதென்றால் "தேவன் ஒன்றை சொல்லுவார், அவர் சொல்லுகிறபடியே அவைகளை பொருள்படுத்தமாட்டார்" என நீங்களாகவே அர்த்தம் கொள்வதுபோல் இருக்கிறது. இவ்வாறு வேத வாக்கியங்களை நமது இஷ்டப்படியோ அல்லது நமது வசதிக்காகவோ மாற்றுவது தவறு அல்லவா?

"அன்பில் அதிகமதிகமாய் பெருக வேண்டும்" என்றல்லவா வேதம் கூறுகிறது. இந்த இடத்தில் போய் "ஏதோ கொஞ்சம்" என்ற வார்த்தை எப்படி உங்கள் மனதில் உதித்தது! இதில் விந்தை என்னவென்றால் "கொஞ்சம்" என்ற வார்த்தையை, எங்கே அப்பியாசப்படுத்த வேண்டும் என வேதம் கூறுகிறதோ அங்கே நாம் அதை அப்பியாசப்படுத்துவதில்லை! நாம் இப்பூமிக்குரியவைகளை "கொஞ்சம்" பெற்றிருந்தால் போதுமென்றே, தேவனுடைய வாக்கியம் போதிக்கிறது. ஆகவே, உங்களிடம் உதித்த "கொஞ்சம்" என்ற வார்த்தை பூமிக்குரியவைகளுக்கு 'கொஞ்சமாயிருந்தாலும் போதும்' என்ற சத்தியத்திற்கே பொருந்தும்! ஆனால் நமக்கு நடந்துவிட்ட சம்பவம் என்ன?

> "**உங்களுக்குள் இருக்கும் அற்ப விசுவாசம், இதையும் தலைகீழாய் மாற்றி "பூமிக்குரியவைகளில் அதிகம் பெற வேண்டும்" என நம்பச் செய்துவிட்டது!**

இதுவே கொடுமையும் வஞ்சகமும் நிறைந்த அற்ப விசுவாசம்! வேதப் புத்தகத்தில் காணும் எல்லா சத்தியங்களையும் தலைகீழாய் மாற்றிவிட்டதே! இதன் விளைவாய், "ஏராளமான பூமிக்குரியவைகள்! ஆனால்..... ஏதோ கொஞ்சம் அன்பு, முடிந்த அளவு பொறுமை....." என்றெல்லாம் மாற்றிவிட்டதே!

இந்த பரிதாபமான அற்ப விசுவாசத்தை அல்லது கொஞ்சமான உங்கள் விசுவாசத்தை இன்னமும் நீங்கள் வைத்திருக்கலாமா? கொள்ளை நோயை வெறுப்பது போல், இந்த அற்ப விசுவாசத்தை வெறுத்து விடுங்கள். அதை இப்பொழுதே உங்கள் இருதயத்திலிருந்து வெளியில் எறியுங்கள்! அப்படியானால், உங்கள் ஜீவியம் முழுதும் விசுவாசத்திலும் அன்பிலும் 'அதிகத்தில்' சுகித்திருப்பீர்கள், ஆமென்!

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

## கர்த்தருடைய உத்தம ஊழியன் A.W.டோசரின் ஜெபம்!

*'முழு அர்ப்பணம்' கர்த்தருக்குப் பிரியம்*

"ஓ என் தேவனாகிய கர்த்தாவே, நீர் தாழ குனிந்து என்னையும் உம்முடைய ஊழியனாய் கனப்படுத்திவிட்டீர்! ஆரோனைப்போல் ஒருவன் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய இந்த மகிமையான கனத்தை 'ஒருவன் தானாகவே தனக்கு எடுத்துக்கொள்ள' முடியாதே! என்னையும் உம் தூதுவனாய் நியமனம் செய்து, வழி விலகிய, முரட்டாட்ட இருதயமும், செவித்தினவும் கொண்ட ஜனங்கள் மத்தியில் என்னை அனுப்பியிருக்கிறீர். இந்த ஜனங்கள்...

"**தங்கள் சொந்த எஜமானாகிய உம்மையே புறக்கணித்து விட்டார்கள்..... அப்படியிருக்க, உமது வேலைக்காரனாகிய என்னை ஏற்றுக்கொள்வார்கள் என என்னால் எதிர்பார்க்க முடியவில்லை!**

என் தேவனே, என் பெலஹீனத்தை நான் புலம்பி அல்லது உம் பணிக்கு தகுதியற்ற என் நிலைக்கு சோர்வுற்று என் நேரத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை! பொறுப்பு என்னுடையதல்ல, அது உம்முடையதாகும்..... ஆம், நீர்தான் என்னைப் பார்த்து "உன்னை நான் அறிந்திருக்கிறேன்! என்றும், உன்னை நான் ஏற்படுத்தியிருக்கிறேன்! என்றும், உன்னை நான் பரிசுத்தப்படுத்தியிருக்கிறேன்!" என்றும் சொல்லிவிட்டீர்! மேலும், நீர் என்னைப் பார்த்து "நான் உன்னை அனுப்பும் இடங்களுக்கெல்லாம் நீ சென்று, உனக்கு நான் கட்டளையிடும் யாவையும் பேசுவாயாக!" என்றும் கூறிவிட்டீர்! உமக்கு எதிர்வாதம் செய்திட நான் எம்மாத்திரம்? அல்லது உம் திவ்விய ஆளுகையில், நீர் என்னைத் தெரிந்துகொண்டதை கேள்வி கேட்பதற்கும் நான் எம்மாத்திரம்? எதையும் தீர்மானிப்பது நான் அல்ல, நீரே அனைத்தையும் தீர்மானிக்கிறீர்! அது, அப்படியே ஆகக்கடவது..... என் சித்தம் அல்ல, உம் சித்தமே செய்யப்படக்கடவது!!

*உம்மால் தெரிந்துகொள்ளப்பட்டும், மகா உன்னத கனம் பொருந்திய பரமஅழைப்பினால் அழைக்கப்பட்டும் இருந்தாலும், நானோ புழுதியும் சாம்பலுமான மனிதன் என்பதையும், மனுஷர்களுக்குரிய சுபாவமான தவறுகளை உடையவன் என்பதையும், மனுஷரைப் பிடித்திருக்கும் இச்சைகள் எனக்குள்ளும் இருக்கிறதென்பதையும், நான் என்றென்றும் மறவாதிருக்க கிருபை செய்தருளும்! ஆகவே, ஆண்டவராகிய கர்த்தாவே, என் சுயத்திலிருந்தும், பிசாசின் தந்திர வீழ்ச்சியிலிருந்தும் என்னைக் காத்தருளும்!*

என்னை உமது **பரிசுத்தாவியின் வல்லமையினால்** நிறைத்தருளும்! அப்போது, உமது பெலத்தில் நான் தீவிரமாய் சென்று உமது நீதியையும், உம்மையும் மாத்திரமே நான் அறிவிப்பேன்! உமது வல்லமை என்மேல் நிலைத்திருக்குமட்டும், என் முழு பெலனோடு "அன்பின் மீட்பு செய்தியை" திக்கெட்டும் நான் பரப்புவேன்!

என் 'இளமையின் துடிப்பை' உமக்காகவே அர்ப்பணித்து ஓடோடி ஊழியம் செய்வதைப்போலவே, **என் முதிர்வயதையும்** உமக்கென்றே அர்ப்பணித்துள்ளேன்! ஆகிலும்.... என் அன்புள்ள ஆண்டவரே, நான் எங்கும் செல்வதற்கு முடியாத வயதாகி, பெலன் குன்றி, ஓய்ந்து போகையில், தயவாய் பரத்தில் எனக்கொரு இடத்தை ஆயத்தம் செய்து..... நித்திய மகிமையில் வாசமாயிருக்கும் உம்மை உத்தமமாய் சேவித்த பரிசுத்தவான்களோடு, என்னையும் ஒருவனாய் சேர்த்துக்கொள்ளும்! ஆமென்.

*- A.W.டோசர்*

---

## 'பாவத்தை ஜெயித்து வாழ்வது' இரட்சிக்கப்பட்டவர்களின் உரிமை!

*தேவ கிருபையை 'சார்ந்து கொள்வதே' ஜெயத்தின் இரகசியம்*

ஜெயங்கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கை வாழ விரும்பும், அனைத்து கிறிஸ்தவர்களும் அறிய வேண்டிய முதல் தகவல் என்னவென்றால்: பாவிகளாய் இருக்கும்போது, நாம் பெற்ற சுவிசேஷம்! இரண்டாவதாக, 'இரட்சிக்கப்பட்ட பிறகு' பாவத்திலிருந்து விடுதலை பெறும் சுவிசேஷம்! **இரட்சிக்கப்பட்டவர்கள் எவ்வித தரத்தின்படி வாழ வேண்டும்?** என்ற கேள்விக்கு விடையாக "இரட்சிக்கப்பட்டவர்களாகிய நமது குறைச்சலான வாழ்க்கையை நாம் கண்ட பிறகுதான்" சத்திய வேதம் கூறும் உயர்வான கிறிஸ்தவ வாழ்க்கை எப்படி வாழ வேண்டும்? என கூறும் செய்தியை அறிந்திட ஆர்வம் கொண்டிட முடியும்!

மத்தேயு 1:21-ம் வசனத்தில் "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என வாசிக்கிறோம். இரட்சிப்பின் ஆரம்ப காலத்தில் இயேசுவை 'கர்த்தராகிய கிறிஸ்து' என அறிந்து கொண்ட யாவரும், **இயேசு என் இரட்சகர்** என்ற பங்கை உணர்ந்து ஆனந்தம் அடைகிறார்கள். இதுவே, நம்முடைய பாவங்களை நீக்கி இரட்சிக்கும் இயேசுவை அனுபவித்திடும் முதல் ஆரம்பமாய் நம் கிறிஸ்தவ பயணத்தை தொடங்குகிறோம். அதாவது, "இரட்சகர் இயேசு நம் பாவங்களை மன்னித்தது மாத்திரமல்ல, தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி இரட்சிப்பார்" என்பதுதான் நம்

யாவருக்கும் தேவன் ஏற்படுத்தியிருக்கும் ஜீவ பாதையாய் இருக்கிறது.

*சத்தியம் அவ்வாறு இருப்பதால், "நாம் பாவத்திலிருந்து விடுதலையாகி இருக்கிறோமா அல்லது இன்னமும் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா?" என கேட்டுப் பார்ப்பது அவசியமாயிருக்கிறது. இன்னும் சற்று விரிவான கேள்வியாய், முன்பு போல் காம இச்சை நம்மை ஆண்டு கொள்கிறதா? கோப ஆத்திரங்கள் நம்மை சீரழிக்கிறதா? துன்மார்க்க சிந்தைகளால் இன்னமும் கட்டப்பட்டிருக்கிறோமா? எல்லாவற்றையும் சேர்த்து 'நம் பாவங்களிலிருந்து' விடுதலையாகி இருக்கிறோமா? என்பதே, நமது விரிவான கேள்வி!*

தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கும் மனிதனைக் காப்பாற்ற ஓர் உயிர்-காப்பு மிதவை, உதவி செய்திட முடியும். அந்த மிதவையை அவன் பற்றிக்கொண்டபடியால், தண்ணீரில் மூழ்கிப் போக மாட்டான். இருப்பினும், அவன் இன்னமும் 'தண்ணீரிலிருந்து' விடுவிக்கப்படவில்லை. அவன் சாகவில்லை, ஆகிலும் அவன் பிழைத்திருக்கவுமில்லை! அவன் ஜீவன் பிழைத்திருக்க ஒரு படகு வேண்டும். நம் ஆண்டவர் தரும் இரட்சிப்பும், இதுபோலவே 'உயிரை பாதுகாக்கும்' மிதவை மாத்திரம் அல்ல.... மாறாக, உயிரை 'மீட்டெடுக்கும்' படகாகவே இருக்கிறது!

சமாரியா ஸ்திரீயிடம் ஆண்டவர் கூறும்போது "நான் கொடுக்கும் தண்ணீரை குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது! நான் அவனுக்கு கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்" என கூறினார் (யோவான் 4:14).

> **"இதுபோன்ற சிலாக்கியமான நித்திய ஜீவனை 'விசேஷித்த கிறிஸ்தவர்களுக்குத் தருவதாக' இயேசு குறிப்பிடவில்லை. இந்த அருமையான வாசகங்களை, தான் ஒருபோதும் சந்தித்திராத ஒரு சாதாரண சமாரியா பெண்ணிடம் இயேசு கூறினார்!**

அவள் விசுவாசிக்கக்கூடுமானால், அவர் தரும் ஜீவ தண்ணீரை பருகிட முடியும் என வாக்குரைத்தார். அவர் தரும் ஜீவன், மீண்டும் தாகமெடுக்காத நிரந்தர ஜீவன்! இந்த ஒப்பற்ற நிலையை விசுவாசம் மூலமாய் கண்டடையும் கிறிஸ்தவன், உலக தேவைகளினிமித்தம் 'போதுமென்ற மனதுடையவனாய் இருப்பது மாத்திரமல்லாமல்' **நிரந்தரமான திருப்தியை** கண்டடைந்து வாழ்வான்! உத்தம கிறிஸ்தவ வாழ்க்கை வாழ விரும்பும் எல்லா கிறிஸ்தவ சகோதர சகோதரிகளும் நித்தியத்திற்குரிய திருப்தியை மாத்திரமே விரும்புவார்கள். ஆகவே

‘தண்ணீரில்’ காக்கப்பட்டது மாத்திரமல்ல, ‘தண்ணீரிலிருந்தே’ விடுதலை பெற்று வாழும் ‘ஜீவ படகாகவே’ இயேசு நமது இரட்சகராய் இருக்கிறார். அப்படி விசுவாசித்தவர்களுக்கு நிஜமாகவே ‘வெற்றியின் ஜீவ பாதை’ அவர்களின் கண்களுக்கு முன்பாக திறந்தளிக்கப்படும்! நாம் இன்னமும் சந்தித்து உணராத பாவங்களை ஜெயித்து வாழ தேவன் எதிர்பார்ப்பதில்லை! ஆனால் நாம் சந்தித்த அல்லது கண்டுணர்ந்த அல்லது சோதிக்கப்படும் பாவங்களை நாம் ஜெயித்து வாழ முடியும்!

*கர்த்தருடைய வல்லமையை தனக்கு சொந்தமாக்கிக் கொண்டவன், அவன் எதிர்கொள்ளும் எல்லா பாவங்களையும் ஜெயித்து வாழ்ந்திடுவான்! அவன் ஒருமுறை கூட தவறி விழமாட்டான் என்பது அர்த்தமாகாது! மாறாக, அவன் ஏழு முறை விழுந்தாலும் விரைந்து எழுந்திருப்பான்! இதுபோன்ற அனுபவமே ஜெயித்து வாழும் கிறிஸ்தவனின் நிரந்தர மகிழ்ச்சி அனுபவமாய் இருக்கிறது. பாவத்திற்கு மரணத்தை விரும்பும் அந்த கிறிஸ்தவன், கிறிஸ்து இயேசுவோடு அவரது மரணத்தில் ஞானஸ்நானம் பெற்றவனாய் நிலைத்திருப்பான். அதனிமித்தமாய் ‘புதிதான ஜீவன் உடையவனாய்’ தினசரி ஜெய ஜீவியம் வாழ்ந்திடுவான்! (ரோமர் **6:4**).*

‘பிரமாணத்தின்படி’ நாம் வெற்றி வாழ்க்கை வாழ இயலாது. ஏனெனில், இவ்வளவு காலம் பாவத்திற்கு அடிமையாயிருந்த எல்லா பாவங்களும் தொடர்ந்து நம் பின்னே விரட்டிவிரட்டி வரத்தான் செய்யும்! ஆனால் தேவனையும், பரிசுத்த ஆவியின் வல்லமையையும், அவர் கிருபையையும் நாடி அனுகூலம் பெற்றவன், விரட்டி வரும் எல்லா பாவங்களையும் நிச்சயமாய் ஜெயித்திடுவான்! அந்த இரகசியம் என்னவென்றால், இனியும் நாம் “நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமல் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் நம்மை மேற்கொள்ள மாட்டாது!” என அறிவிக்கும் ரோமர் **6:14**-ம் வசனம் ஜீவ வசனமாய் உங்கள் யாவருக்கும் மாறிவிடும்!

*- வாட்ச்மென் நீ*

---

## தமது ஊழியர்களை அழைத்த தேவ ஞானம் விசித்திரமானது!

*‘தன்னை வெறுமையாக்க துணிபவனை’ அவர் அழைக்கிறார்*

**எ**ஜமானாகிய இயேசு, உலகத்தில் தமது ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கப்போகிறார். தேவ ராஜ்ஜியத்தை, இந்த பூமியில் ஸ்தாபிப்பதே, சபையின் முக்கிய பணியாகவும் இருக்கிறது! மகா உத்தரவாதமான இந்த வேலையை, எஜமான் யார் கையில் ஒப்புவிக்கப்போகிறார்? அவர்கள் யாராயிருக்கலாம்? ஆம், இவர்களை தெரிந்தெடுக்கும்படி

ஆண்டவர் இயேசு, தன் பிதாவின் முகத்தையே நோக்கிப் பார்த்தார்! ஒரு இராமுழுவதும் தனித்திருந்து இதற்காக ஜெபம் செய்தார். மறுநாள் காலையில் சீஷர்களின் கூட்டம் தம்மிடத்தில் வந்தபோது, இஸ்ரவேல் கோத்திரத்தின் இலக்கப்படி பன்னிருவரைத் தெரிந்து கொண்டார்.

> “ **இந்தப் பன்னிருவரையே தமக்கு அப்போஸ்தலராக ஏற்படுத்தினார். அப்போஸ்தலர் என்றால் ‘அனுப்பப்பட்டவர்கள்’ என்று அர்த்தம். அதாவது, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்து அவரது பணி நிறைவேற்றிட, அவரால் நியமிக்கப்பட்டு அதிகாரம் பெற்றவர்கள்!**

ஆரம்பத்தில், ஐந்து பேர் அவரைச் சேர்ந்தார்கள். அவர் கலிலேயாவுக்கு வந்தபின், பன்னிருவரை அழைத்தார். சற்றுப் பொறுத்து, இந்தப் பன்னிருவரையே அப்போஸ்தலராக்கினார்!

இவ்வளவு மகத்துவமான ஊழியத்தைச் செய்ய மகத்துவமான மனுஷர் வேண்டுமல்லவோ? இராஜ்யத்தின் சுவிசேஷம் சகல மனுஷருக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டுமே. இந்த உலகத்தில் இராஜாக்கள், மந்திரிமார், பிரபுக்கள், ஞானிகள், தர்க்க சாஸ்திரிகள் இருக்கிறார்களே! இவர்களோடு பேசத்தக்க சாமர்த்தியமும், கல்வியும் உள்ளவர்கள் அவசியமாயிருக்க, அஸ்திபாரமே பலவீனமாயிருந்தால் கட்டடம் எப்படி நிலை நிற்கும்?

> “ **ஊழியம் எவ்வளவு விசேஷமோ அவ்வளவுக்கு ஊழியர்களும் விசேஷித்தவர்களாயிருக்க வேண்டுமே!**

அப்படிப்பட்ட திறமைசாலிகள் எஜமானுக்குக் கிடைக்க மாட்டார்களா? அவர்களைத் தெரிந்தெடுப்பது அவருக்கு அவ்வளவு கஷ்டமா? வேதசாஸ்திரியும் இஸ்ரவேலில் போதகனுமான *நிக்கோதேமுவைத்* தெரிந்து கொள்ளலாமே! ஜெப ஆலயத்தலைவன் *யவீரைத்* தெரிந்து கொள்ளலாமே! கற்பனைகளில் எது பிரதானமென்று கேட்ட விவேகமுள்ள *வேதபாரகனைத்* தெரிந்துகொள்ளலாமே! அவன் தேவனுடைய இராஜ்யத்துக்குத் தூரமானவனல்லவென்று அவனிடத்தில் அன்புவைத்துச் சொன்னாரல்லவா! நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி ஆவலோடு ஓடிவந்த *ஐசுவரியவானை* வசப்படுத்தியிருக்கலாமல்லவா! அவருக்கு விருந்துசெய்த *பரிசேயனைக்கூட* தெரிந்துகொண்டிருக்க முடியுமே! ஏனெனில், இவர்கள் வேத சாஸ்திரமறிந்தவர்கள். சகலரும் மதித்து வந்த அரிமத்தியாவூர் *யோசேப்பைத்* தெரிந்துகொண்டிருக்கலாம், அவன் கிடைத்திருந்தால், பணசகாயத்துக்கும் செல்வாக்கிற்கும் குறைவிராதே!

*எல்லாராலும் புகழ்பெற்ற **கமாலியேல்** எப்பேர்ப்பட்ட வேதசாஸ்திரி? அவனை அழைத்திட ஆண்டவரால் கூடாதா? எருசலேமை ஆதாயப்படுத்த அவன் ஒருவன் போதாதா? இவைபோன்ற கேள்விகள் நமது புத்திக்கு ஏற்றதாய் தோன்றலாம்! சாமுவேல் என்னும் தீர்க்கதரிசி ஈசாயின் மக்களுடைய முகத்தோற்றத்தைக் கண்டு அவர்களை அபிஷேகம் செய்ய நினைத்ததுபோல, தற்காலத்திலும் முகத்தோற்றமான புறம்பான காரியங்கள் ஊழியர்களை ஏற்படுத்துகிற விஷயத்தில் நம்மை ஏமாற்றுகின்றன!*

**“ ஊழியர்களை ஏற்படுத்துவதில் நாம் மோசம்போனால், கர்த்தருடைய ஊழியமும் மோசமாகுமென்பது மெய்!**

தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அனுதினமும் எஜமானைப் பின்செல்வது இலேசான காரியமல்ல! அவர் போகிற பாதையோ, பசியும் தாகமும் நிந்தையும் பாடுகளுமுள்ளது. மீட்பர் சென்ற பாதையில், மேலே குறிப்பிடப்பட்ட ‘புகழுக்குரிய’ மேன்மக்களான இவர்கள், தாழ்மையோடு ஊழியம் செய்வார்களா?

ஆனால், எஜமான் அழைத்த விந்தையான அழைப்பைப் பாருங்கள். மாம்சத்தின்படி ஞானிகள் அநேகர் இல்லை! வல்லவர்கள் அநேகர் இல்லை! பிரபுக்கள் அநேகர் இல்லை! ஞானிகளை வெட்கப்படுத்தும்படி அவர் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்! பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி அவர் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்! உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாக எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தெரிந்துகொண்டார்! மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாக பெருமை பாராட்டாதபடிக்கே அப்படிச் செய்தார்!

பவுல் சிறந்த கல்விமானாயிருந்தது மெய்தான். ஆகிலும், தனக்கு மேன்மையாயிருந்த யாவையும் கிறிஸ்துவுக்காக அற்பமும் குப்பையுமாக எண்ணினபோதல்லவோ, பரம ஞானம் அவருக்கு வெளிப்பட்டது. அதுமுதலாய் ‘சிலுவையிலறையுண்ட’ இயேசு கிறிஸ்துவே அவருக்குத் திகட்டாக் கல்வியும் தேவ ஞானமுமானார்!

**“ இவ்வாறு தன்னை வெறுமையாக்கின *பவுல்* என்னும் பாத்திரத்தில், பரமபொக்கிஷமாகிய தமது ஊழியத்தை இயேசு பொழிந்தார்!**

இவ்வாறாக, ஏழைச் செம்படவர்களே அவருக்கு ஊழிய கூட்டாளிகளானார்கள்! குயவன் கையிலுள்ள களிமண், அழகும்

*பிரயோஜனமுமான பாத்திரங்களாகச் செய்யப்படுவதுபோலவே, தன்னை வெறுமையாக்கின இவர்களும், எஜமானுக்கு உபயோகமான பாத்திரங்களாவார்களென்று இயேசு, திட்டமாய் நம்பினார்!*

*- பரமானந்தம் ஐயர்*

---

## 'பரிசுத்த ஜீவியத்தின் வயோதிபம்' பொற்காலம் போன்றது!

*சேர்த்துக் குவித்த 'தெய்வ ஞானத்தை' பிரகாசியுங்கள்*

*பரிசுத்த வாழ்க்கையில் பல வருடங்கள் கடந்து வந்து இப்போது 70 வயதிற்குமேல் முதிர்வயது அடைந்த சகோதரனே, தேவன் உங்களுக்குத் தரும் சத்தியங்களை கவனியுங்கள்: "உங்கள் ஆவியில் **'பரிசுத்தமான தைரியம்'** உண்டாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தம்! நீங்கள் வயது சென்றதினிமித்தம், உங்கள் ஜீவிய பாதைக்குள் பிசாசானவன் நுழைந்துவிட ஆர்வமாய் இருப்பான்! உண்மை என்னவென்றால், **நீங்கள் தேவனால் புடமிடப்பட்ட மிகச் சிறந்த யுத்த வீரன்!** ஆவிக்குரிய பகுத்தறிவு தெளிவு பெற்றவர்! ஞானத்தில் வளர்ந்தவர்! சிங்கம் தன் குட்டிகளை பாதுகாப்பது போல, நீங்கள் பெற்றிருக்கும் சமாதானத்தை, தேவ ராஜ்ஜியத்தை, விலையேறப்பெற்ற பொக்கிஷமாய் காக்க வேண்டிய பொறுப்புள்ளவர்! உங்கள் வாலிபத்தில் தவறுகள் பல செய்திருந்தாலும், அவைகளைத் தீமையென கண்டு, அதிலிருந்து விலகி, தெய்வ பயம் கொண்டு வாழ்ந்தீர்கள். "இப்போதுள்ள வாழ்க்கையோ" நீங்கள் எந்த தீர்மானம் எடுத்தாலும், மிக ஆழமாய் சிந்தித்து, முடிவுசெய்ய வேண்டிய மிகப் பெரிய பொறுப்பில் வாழ்ந்து வருகிறீர்கள்! ஆகிய இவைகளே, உங்கள் முதிர்வயதின் மேன்மை!*

*ஆகவேதான், இப்போது உங்கள் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் குறுக்கிடும் நபர்கள், உங்கள் ஆவிக்குரிய நிலையை உயர்த்த வந்தவர்களா? அல்லது உங்களின் மனதிடத்தை தள்ளி விட வந்தவர்களா? என்பதை நிதானித்து ஞானமாய் நடந்து கொள்ளுங்கள். "வயது முதிர்ச்சியினிமித்தம்" தனிமையாய் இருப்பது போன்ற உணர்வுகளுக்கு அடிமையாகிட இடம் கொடுக்காதிருங்கள். உங்கள் தனிமையை யாராவது மாற்றித்தர முடியுமோ? என்ற யூகத்தில் 'துணை சேர்க்கவும்' முயற்சிக்காதீர்கள். அது அநேகமாய் சாத்தானுடைய திட்டமாய் இருக்கக்கூடும்!*

*சத்துருவானவன் இளைஞர்களை சீரழிப்பது மாத்திரமல்லாமல், முதிர்ச்சி பெற்றவர்களையும் சீரழிக்கவே முயற்சிக்கிறான். வயதான விதவைகளை தாக்குகிறான்; நண்பனைப்போல் வந்து, உங்கள் பக்தி வைராக்கியத்தை திருடுகிறான்! உங்கள்மீது அக்கறை கொண்ட*

*உறவினர்கள் மூலமாயும், உங்களை நெருங்கி வந்திடுவான்! அது ஏன்? உங்கள் உள்ளத்தில் ஏராளமாய் வைத்திருக்கும் 'சமாதான பொக்கிஷத்தை' அவர்கள் மூலமாக களவாட முடியுமோ? என்ற சத்துருவின் பொல்லாத ஒரே நோக்கம்தான்!*

"

**சத்துருவின் வஞ்சனை என்னவென்றால், முதிர்ந்த உங்களின் நிலைத்திருக்கும் ஆவியை தொய்வடையச் செய்து, உங்களின் இந்த வயோதிப பொற்காலத்தை சோகமயமாய் மாற்றவே விரும்புகிறான்! 'ஒன்றுக்கும் உதவாதவர்கள்' என்ற குப்பை மேட்டில் நீங்கள் சாய்வதை தேவன் ஒருபோதும் விரும்பமாட்டார்!**

***ஓ*** *முதிர்வயது பரிசுத்தவானே, உங்கள் நாசியில் சுவாசம் உள்ளவரை, உங்களைக் குறித்து தேவ நோக்கம் ஒன்று உண்டு என்பதை மறவாதிருங்கள்! அந்த நோக்கம் பாதுகாக்கப்படவும், நிறைவேற்றப்படவும் வேண்டியது எத்தனை அவசியம்! உசிதமான தேவ பெலத்தால் உங்கள் இருதய பலத்தை காத்துக்கொள்ள வேண்டிய நேரம் இது! உங்கள் சிந்தைகள் சத்தியத்தால் காக்கப்பட வேண்டும், எந்த அவசர தீர்மானத்திற்கும் 'இல்லை என பதில் கூறி' நான் தேவனோடு இசைந்து நடந்தே முடிவு செய்பவன் என்பதை திட்டமாய் கூறுங்கள்! உங்களின் முதிர்ந்த நிலையில் "மனத்தெளிவு" போய்விட்டது என கூறுபவர்கள் உங்களைச் சூழ நிற்கிறார்கள்! உங்கள் பெலன் குறைந்துவிட்டது என, உங்களை மட்டுப்படுத்துகிறவர்களும் இருக்கிறார்கள்! கவனியுங்கள், உங்களை பெலவீனப்படுத்துவது உங்கள் முதிர்வயது அல்ல! உங்களைச் சுற்றி நிற்கும் அன்புள்ள ஜனங்களே, தங்களையும் அறியாமலே உங்களைப் பெலவீனப்படுத்துகிறார்கள்! நல்ல நண்பர்களும் நட்பும் நல்லதுதான், ஆனால், உங்கள் உள்ளத்தில் கலக்கத்தையோ பயத்தையோ கொண்டு வரும் நட்பு நல்லதல்ல!*

"அவ்வாறு செய்திட என்னால் கூடாது" அல்லது "இந்த முடிவு நல்லதல்ல" என நீங்கள் மறுப்பு கூறுவதற்கு முடியாத நிலைக்கு எந்த மானிட சிநேகமும் குறுக்கிட அனுமதிக்காதீர்கள். இந்த முதிர்ச்சியான காலங்களில் 'சிலருடைய அன்பை' மறுத்துப்பேசிட, உங்களுக்கு மனக்கிலேசமாய் இருக்கலாம். ஆனால் நான் உங்களுக்கு எடுத்துக்காட்டும் தேவ வசனம் என்னவென்றால்: "பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்" என்ற சத்திய வசனமேயாகும்! (1யோவான் 4:18). மேலும், "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைத் தராமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே தந்திருக்கிறார்"

என்றே வாசிக்கிறோம் (2தீமோ.1:7).

**"உங்களின் பொற்கால வயதின் காலத்தில் 'தேவனை கனம் பண்ணுவதற்கே' முற்றிலுமாய் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். அப்படியில்லாமல், எல்லா மனுஷரையும் பிரியப்படுத்துவதற்கு அல்ல!**

தேவனுக்குரிய உற்சாகத்தை தரமுடியாத எந்த சம்பாஷணைகளையும் கேட்பதற்கு மறுத்துவிடுங்கள்! நீங்கள் சேர்த்து வைத்திருக்கும் தெய்வீக பொக்கிஷங்கள் மகா மேன்மையுள்ளது! அதை இழப்பதற்கு சிறிதுகூட இடம் கொடுக்காதீர்கள்! ஆமென்.

- பண்டிதர் பில்லிகிரஹாம் (USA)

---

## நம் மாம்சத்தில் வெளிப்பட்டு, எதிரியை இயேசு துவம்சம் செய்தார்!

*ஆ அதுவே, தேவபக்திக்குரிய மகா மேன்மையான இரகசியம்*

ஆதாம் ஏவாளின் வீழ்ச்சி, அவர்கள் 'நிர்வாணி' ஆனார்கள் என்பதே ஆகும்! (ஆதி.3:11). அதாவது, தேவ சாயலாய் இருந்த 'ஆவியில்' மரணம் அடைந்து, வெட்கி நிர்ப்பந்தமடைந்த **மாம்சத்திற்குரியவர்களாய்** மாறினார்கள்! இந்த வீழ்ச்சிக்கு தந்திரம் செய்த சாத்தானை நோக்கி, அன்று தேவன் சூளுரைத்த போர் முழக்கமே "**ஸ்திரீயின் வித்து உன் தலையை நசுக்கும்**" என்ற, தேவனுடைய நோக்கத்தை நாம் அறிந்து கொள்ள முடிகிறது! (ஆதி.3:15).

மீண்டுமாய், இழந்துவிட்ட 'தேவனோடு கொண்ட ஐக்கியத்தின்' பக்தியுள்ள ஜீவியம் வேண்டும் என வாஞ்சித்திடும் அனைவரும் நிச்சயமாய் அறிந்துகொண்ட உண்மை என்னவென்றால் "என் மாம்சத்தில் நன்மை வாசமாயில்லை.... எனக்குள் பாவம் வாசமாயிருக்கிறது" என்ற சத்தியமேயாகும்! (ரோமர் 7:18,20).

நானே தூக்கி சுமந்து வாழும் இந்த நிர்ப்பந்தமான "மாம்சத்திலிருந்து யார் என்னை விடுதலையாக்குவார்?" என்றே, தேவ உறவில் பக்தி வாழ்க்கை நாடும் எல்லா தாசர்களும், தங்கள் வாழ்விலே ஒருநாள், உரத்த சத்தமாய் கேட்டிருப்பார்கள்! ஆம், **நமக்கு இரட்சகர் பிறந்துள்ளார்,** என்பதே அதற்கு விடை! "இயேசு கிறிஸ்து மூலமாய்" இந்த மாபெரும் விடுதலையைத் தந்த 'தேவனுக்கே ஸ்தோத்திரம்' உண்டாவதாக! (ரோாமர் 7:24,25) என அறிவிக்கப்பட்ட நற்செய்தி, "தேவபக்தியாய் வாழ வாஞ்சித்திடும்" யாவருக்கும் சொந்தமான நற்செய்தியாகும்! அவர் மூலம் பெற்ற 'பாவ மன்னிப்பு' ஆரம்ப நிலை மாத்திரமே! ஆனால் மாம்சத்திலிருந்து விடுதலையாகி வாழும் 'தேவ பக்தியோ' மகா உச்சிதமானது!

"

**ஜீவ காலமெல்லாம், நாம் பக்தி வாழ்வை வாழ முடியாதபடி தடையாய் இருந்துகொண்டிருக்கும் "நம் சொந்த மாம்சத்திலே" தேவன் வெளிப்பட்டு, அவரே மாம்சத்தை நமக்காக 'சிலுவையில் அறைந்து' 33½ ஆண்டுகால தனது குறைந்த ஜீவியத்தில், அந்த மாம்சத்தைக் கொன்று, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, துவம்சம் செய்து முடித்தார்! (ரோமர் 8:3).**

*இவ்வாறு "அவர்தாமே (நம்மைப் போன்ற மாம்சத்தில்) சோதிக்கப்பட்டு" ('மாம்சத்தை சிலுவையில் அறைந்து') பாடுபட்டவராய்,* **நமக்காக வெளிப்பட்ட தமது மாம்சத்தின் வழியாய்,** *அதாவது மா பரிசுத்த ஸ்தலத்தின் வழியை மறைத்த 'மாம்சத்தின் திரையின் வழியாய்' நாமும் பிரவேசிக்கும்படி, புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்காக உண்டுபண்ணினார்! (எபி.2:18; 10:19). ஆகவே, அவர் முன்சென்று உண்டாக்கிய வழியில், நாமும் பின்பற்றிச் சென்று "விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு" இயேசு அடைந்த அதே இலக்காகிய பிதாவின் வலதுபாரிசமாகிய அவரது சமூகத்தில் நெருங்கி, நெருங்கி சேரக்கடவோம்! என ஆவியானவர் அன்புடன் அழைக்கிறார்! (எபிரெயர் 10:20,22).*

*இந்த ஆச்சரியமான தேவபக்தியின் இரகசியத்தை, வெறும் உபதேசமாய் விளங்கிக்கொண்டால் மாத்திரம் போதுமானதல்ல! இந்த ஒப்பற்ற "சிலுவையின் பாதையில் நடப்பதும்" இரகசியமேயாகும்! ஆம், 1)அவரவர் மாம்சம் (சுயம்) சிலுவையில் அறையப்பட்டு சிதைவது இரகசியம் 2) 'ஆவியானவர்' அதைக் கண்டு அங்கீகரிப்பது இரகசியம்! 3) இந்த ஜீவியம் 'தேவதூதர்களால்' சாட்சியாக காணப்படுவதும் இரகசியம்! (1தீமோ.3:16முன்).*

"

**ஆம், இந்த ஒப்பற்ற சிலுவையின் ஜீவியம் முழுவதும் 'அந்தரங்கத்தில் வாழும்' இரகசியமாகும்!**

*அதுபோலவே, மனுஷர்களுக்கு முன்பாகவும் நம் தேவபக்தி, சாட்சியாக மிளிர்ந்திட வேண்டும்! ஆம், உங்களைச் சுற்றியுள்ள புறஜாதிகளிடத்திலும் 'உங்கள் தேவபக்தியான ஜீவியம்' ஜீவ வார்த்தைகளாய் பிரசங்கிக்கப்பட வேண்டும்.... அதாவது, சுவிசேஷமாய் அறிவிக்கப்பட வேண்டும்! உலகத்தாரும் விசுவாசித்திட வேண்டும்! ஆகிய இந்த விசுவாச ஓட்டமே, நாம் மகிமையிலே முடிவாக எடுத்துக் கொள்ளப்படச் செய்திட முடியும்!(1தீமோ.3:16பின்).*

*அல்லேலூயா, ஆமென்!*

*- T.ரத்தினகுமார்*

## 'சாத்தானின் சூழ்ச்சியை' புத்தகங்கள் மூலமாய் எச்சரித்த பரிசுத்தவான்!
## C.S.லூயிஸ்



ஆதியில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள், தங்கள் ஆவிக்குரிய ஜீவிய பயணத்தை தடை செய்த 'சத்துருவாகிய சாத்தானை' அனுபவபூர்வமாய் கண்டறிந்தார்கள்! இதுபோன்ற வாழ்க்கையே மார்டின் லூத்தர் எதிர்கொண்டார்! மோட்ச பயண புத்தகத்தை எழுதிய *ஜான் பனியன்* அவர்களும் எதிர்கொண்டார். ஆனால் இன்று வாழும் கிறிஸ்தவர்களோ, இந்த பரிசுத்தவான்களைப் போல் சாத்தானை எதிர்த்து முன்னேறாமல், தங்களுக்கு நேர்ந்திடும் ஆவிக்குரிய போராட்டத்தை 'மனநிலை போராட்டமாகவோ' 'சமுதாய தீமைகளின் போராட்டமாகவோ' நம்பும்படி சாத்தான் செய்துவிட்டான். இதுபோன்ற கொடிய நாட்களில்தான் 18-ம் நூற்றாண்டில் பிறந்த *C.S.*லூயிஸ் சவாலிட்டு எதிர்த்தார். இரண்டாம் உலகப்போரின் முதல் கட்டத்திற்கு பிறகு, அடிப்படை கிறிஸ்தவ போதனையை முதன்மைப்படுத்தி 'வெற்று கிறிஸ்தவம்' (Mere Christianty) என்ற எழுச்சியூட்டும் புத்தகத்தை எழுதினார்.

இதில் விந்தை என்னவென்றால், தன்னுடைய வாலிபம் தொடங்கி 1920-ம் ஆண்டு வரை லூயிஸ் அவர்கள் ஒரு நாஸ்திகனாய் வாழ்ந்ததுதான்! அதே ஆண்டில், அவர் மனம் திரும்பி 'கிறிஸ்தவ விசுவாசத்தை' மனதார ஏற்று இங்கிலாந்தில் ஒரு புரோட்டஸ்டன்ட் சபைக்கு சென்று கர்த்தரை ஆராதித்தார்! 1954-ம் வருடங்களில் ஏராளமான சிறந்த நாவல் புத்தகங்களையும், சிறுபிள்ளைகளுக்கான புத்தகங்களையும், வேத சாஸ்திர புத்தகங்களையும், தர்க்க ரீதியான ஆராய்ச்சி புத்தகங்களையும் எழுதினார்! 1941-ம் ஆண்டு அவர் வெளியிட்ட 'தலைமை பிசாசின் துன்மார்க்கங்கள்' என்ற நாடக வடிவிலான அந்த புத்தகம், மிகுந்த பிரபல்யமாய் ஏராளமான ஜனங்கள் வாசித்து விழிப்படையச் செய்தது!

தலைமை பிசாசு, தன்னுடைய *கசப்பூட்டும் பேயிடம்* 'நீ எப்படியெல்லாம் கிறிஸ்தவர்களை கலங்கடிக்க செய்ய வேண்டும்' என்ற அறிவுரையின் ஒரு பகுதியை வாசித்துப் பாருங்கள்:

எனக்கு அருமையான கசப்பூட்டும் இளவயது பேயே, உனது வாடிக்கையாளராக பிடித்திருக்கும் அந்த கிறிஸ்தவனின் விசுவாசத்தை நிச்சயமாய் தகர்த்துவிட முடியும். நம்முடைய சத்துருவாகிய தேவன், மனுஷனிடம் எதையும் கட்டாயப்படுத்துவதில்லை! ஆனால், மனுஷனிடம் 'உன் இருதயத்தை எனக்குத்தா' என கதவை தட்டுவதுபோல் கெஞ்சி கேட்பார். அவர் காட்டும் தயவை மானிடர் செவி கொடுக்காமல், தன் இஷ்டப்படி வாழுவார்கள்! சத்துருவாகிய தேவனின் நோக்கம் என்னவென்றால் "தன் சிருஷ்டிப்பாகிய மனுஷன், தானாகவே அவரை தெரிந்து கொள்ள வேண்டும்" என்ற விருப்பம்தான். இதை நீ அறிந்து கொண்டால், சத்துருவின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மானிடர்களை, நம் பக்கத்தில் இழுத்துக்கொள்வது எளிது. எதிரியாகிய தேவன் வகுக்கும் திட்டங்களை உடைத்தெறிவது எப்படி? என்ற நல்ல ஆலோசனைகளை நான் உனக்கு சீக்கிரத்தில் கூறுகிறேன்.... என்றான்!

சுமார் 75-பக்கங்கள் கொண்ட இந்த ஆங்கிலப்புத்தகம், பல்லாயிரக்கணக்கான விசுவாசிகளை எச்சரித்து விழிப்பூட்டுகிறது!

- நிரூபித்து வாழும் கிறிஸ்துவின் தாசர்கள்

## உலக இன்பம் ஓர் மாயவலை! விடுதலை தருபவர் இயேசு!

மேற்குத் தொடர்ச்சி மலை தேசத்தில் 'நெடுகுளா' என்ற கிராமத்தின் அருகில், ஒரு சிறுத்தை புலி, ஒரு நாயை துரத்திக் கொண்டு சென்றது. நாய் தனது ஜீவன் தப்ப ஓடி, ஓடி கடைசியாக ஒரு வீட்டிற்குள் சென்று ஒரு அறைக்குள் பதுங்கிக் கொண்டது. சிறுத்தையும் நாயைத் தொடர்ந்து ஓடி அதே அறைக்குள் சென்றுவிட்டது. சிறுத்தை அறையினுள் இருப்பதை அறிந்த வீட்டுக்காரர், உடனே அறையின் கதவை பூட்டிவிட்டார்!

ஒரு ஆச்சரியமான காரியம் என்னவெனில், அந்த சிறுத்தை தன்னோடிருந்த நாயைக் கடித்து உண்ணவில்லை. வீட்டின் அறைக்குள் தானே மாட்டிக் கொண்டதால், தனது சுவையான உணவின் ஆசை எல்லாம் அதை விட்டு மறைந்து போய்விட்டது. தனது ஜீவனே இரும்பில் அடைபட்டு சத்துருவின் கரத்தில் இருக்கும்போது தனக்கு ஒரு சுவையான உணவும் தேவையா? என்று, அது அந்த நாயை கடித்து தின்னவில்லை. அந்த சுவராஸ்யமான செய்தி, அநேகமாக எல்லா தினசரி பேப்பர்களிலும் வெளி வந்தது. சிறுத்தை புலி அந்த நாய்க்கு ஒரு தீங்கு கூட செய்யவில்லை!

வாலிபரே, கேளுங்கள் ஓர் செய்தி: யாரை விழுங்கலாம் என்று சுற்றி அலைகின்ற கெர்ச்சிக்கிற சிங்கமாம் சாத்தானின் பிடியிலுள்ள நமக்கு, உலகத்தின் பிறிதொரு சந்தோஷம் என்னத்திற்கு? நமது அருமையான ஜீவனே அவனது வலைக்குள் சிக்கியிருக்கும்போது, அந்த வலைக்குள் இருக்கும் உலக சிற்றின்ப ஆசை இச்சைகளை சுவைப்பது எதற்காக? சிறுத்தைக்கு தனது உயிரைப் பற்றிய கவலை அதிகரிக்கவே, தனக்கு அருகிலிருந்த சுவையான நாய் மேல் இருந்த ஆசை எல்லாம் பறந்தோடிப்போய்விட்டது!

ஆனால், ஞானமுள்ள மாந்தராகிய வாலிபரே, நமது காரியம் ஏன் மாறுபாடாய் உள்ளது? சத்துருவாகிய பிசாசின் கண்ணியில் நாம் சிக்கியிருந்தாலும், அந்த கண்ணிக்குள் நமக்காக வைக்கப்பட்டிருக்கும் உலக ஆசை இச்சைகளை முழு மூச்சுடன் அனுபவித்து வருகின்றோமே? அது, நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வதல்லவா? கர்த்தரை மனதார தேடி, உங்கள் ஆத்துமாக்களை உலக மாயையிலிருந்து உங்களை காத்துக்கொள்ள வேண்டாமா?

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**

maduraichristianfellowship@indianbk